# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தனியார் பாதுகாப்பு முகவராண்மைகளை ஒழுங்குபடுத்துதல் சட்டம்

---

(1998, ஓகத்து மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1998, ஓகத்து மாதம் 21 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 9.00 தபாற் செலவு : ரூபா 2.50

# 1998 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தனியார் பாதுகாப்பு முகவராண்மைகளை ஒழுங்குபடுத்துதல் சட்டம்

[1998 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. — ஓ. 9/ 96

## தனியார் பாதுகாப்பு முகவராண்மைகளின் தொழிலைக் கொண்டுநடாத்துதலை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப் படுத்துவதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தனியார் பாதுகாப்பு முகவராண்மைகளை ஒழுங்குபடுத்துதல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட திகதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

தனியார் பாதுகாப்பு முகவராண்மைகளின் தொழிலைக் கொண்டு நடாத்தும் ஆட்களைப் பதிவு செய்தல்.

2. நியமிக்கப்பட்ட திகதியிலிருந்தும் அதன் பின்னரும் ஆளெவரும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அதன்பொருட்டு வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழும் அத்துடன் வேறுவகையில் அதன் நியதி நிபந்தனைகளுக்கிணங்கவும் தவிர, தனியார் பாதுகாப்பு முகவராண்மையின் தொழிலைக் கொண்டு நடாத்துதல் ஆகாது :

ஆயினும் நியமிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் தனியார் பாதுகாப்பு முகவராண்மையொன்றின் தொழிலைக் கொண்டு நடாத்திவந்த ஆளெவரும் அத்தகைய திகதியிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு அவ்வாறு தொடர்ந்து செய்யலாம் ; ஆனால் அத்தகைய காலப்பகுதிக்குள் பதிவு செய்யப்படுவதற்கு விண்ணப்பித்தலும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் உரிமமொன்றைப் பெற்றுக்கொள்ளுதலும் வேண்டும்.

2—ட 043247—1,100 (97/03)

தகுதிவாய்ந்த அதிகாரியை நியமித்தல்.

3. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென —

(அ) தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் தகுதிவாய்ந்த அதிகாரிக்குத் துணைபுரிவதற்கு அவசியமாகக் கூடியவர்களான அத்தகைய எண்ணிக்கையினரான அலுவலர்களும் சேவையாளர்களும் பெயர்குறித்து அல்லது பதவிகுறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி, இச்சட்டத்தின் ஏற்பாடுகளைத் திறமையுடன் நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமானதெனக் கருதுமிடத்து, இச்சட்டத்தின் கீழ் அவருக்கு உரித்தாக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும் அல்லது அவற்றுள் எதனையும் மாவட்டமொன்றுக்கு நியமிக்கப்பட்ட மாவட்டச் செயலாளருக்குக் கையளிக்கலாம். ஆயின் எவ்வாறாயினும், இப்பிரிவின்கீழ் கையளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அத்தகைய மாவட்டச் செயலாளரினால் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட ஏதேனும் செயலுக்கு அல்லது விடயத்திற்குத் தகுதிவாய்ந்த அதிகாரியே பொறுப்பாதல் வேண்டும்.

தனியார் பாதுகாப்பு முகவராண்மைகளின் தொழிலைக் கொண்டு நடாத்தும் ஆட்களின் பதிவுக்கான விண்ணப்பம்.

4. (1) இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் தனியார் பாதுகாப்பு முகவராண்மையொன்றின் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது கொண்டுநடாத்த உத்தேசிக்கின்ற ஆளொருவரால், தகுதிவாய்ந்த அதிகாரிக்கு விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பத்தில் அடங்கியுள்ள விவரங்கள் விண்ணப்பகாரரின் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவை செம்மையானவையுமாகும் என்ற வெளிப்படுத்துகையொன்றும் விண்ணப்பத்துடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு ஒரு விண்ணப்பம் செய்யப்படுமிடத்து, அவர், அத்தகைய விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்யும் நோக்கத்திற்கு அவசியமானதென அவர் கருதுகின்றவாறான அத்தகைய தகவலை அல்லது ஆவணங்களைக் கோரலாம்.

(3) தகுதிவாய்ந்த அதிகாரி, விண்ணப்பத்தையும் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்குக் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவலையும் அல்லது ஆவணத்தையும் பரிசீலனை செய்தபின்னர், விண்ணப்பகாரர் தனியார் பாதுகாப்பு முகவராண்மையொன்றின் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமான பயிற்சியையும் வசதிகளையும் கொண்டுள்ளார் எனவும், விண்ணப்பகாரரைப் பதிவுசெய்தலானது தேசிய பாதுகாப்பிற்குப் பங்கம் ஏற்படுத்துவதாயமைய மாட்டாது எனவும், விண்ணப்பகாரர் அல்லது விண்ணப்பகாரரின் அலுவல்களை முகாமைசெய்யும் ஆள் நல்லொழுக்கப் பிறழ்வு சம்பந்தப்பட்ட தவறொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருக்க வில்லை எனவும் அவர் திருப்தியுற்றால், விண்ணப்பகாரரைப் பதிவுசெய்யலாம்.

5. (1) ஆளொருவர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளவிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி, குறித்துரைக்கப்பட்ட படிவத்தில், குறித்துரைக்கப்பட்ட கட்டணமொன்று செலுத்தப்படுவதன்மீது, தனியார் பாதுகாப்பு முகவராண்மையொன்றின் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு அத்தகைய ஆளுக்கு அதிகாரமளித்து உரிமமொன்றை அவருக்கு வழங்குதல் வேண்டும். அத்தகைய உரிமம் ஒவ்வொன்றும் ஈராண்டுக் காலப்பகுதிக்கு செல்லுபடியுடையதாதல் வேண்டும். உரிமம் வழங்குதல்.

(2) இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் உரிமம் ஒன்று, விதித்துரைக்கப்படக்கூடியவாறான (உரிமம் ஒன்றை வைத்திருக்கும் ஆள் ஒருவரால் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆளணியினரின் தொழிலை முடிவுறுத்துதல் வேலை நேரங்கள் தொடர்பான நிபந்தனைகள் அத்துடன் வேறு தொழில் நிபந்தனைகள் உட்பட) அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைந்ததாயிருத்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படும் உரிமம் எதுவும் வேறு எவரேனும் ஆளுக்குக் கைமாற்றப்படற்பாலதாதல் ஆகாது என்பதுடன் அதற்கிணங்க அத்தகைய கைமாற்றம் எதுவும் வெற்றும் வறிதுமாதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் உரிமம் ஒவ்வொன்றும் எல்லா நேரங்களிலும் தனியார் பாதுகாப்பு முகவராண்மையொன்றின் பிரதான அலுவலகத்தில் அல்லது அத்தகைய தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு அத்தகைய உரிமத்தால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் தொழிலிடத்தில் வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும்.

தகுதிவாய்ந்த அதிகாரியால் பேணப்பட வேண்டிய இடாப்பு.

6. தகுதிவாய்ந்த அதிகாரி, இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வோர் ஆளினதும் இடாப்பொன்றை விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப் பெற்ற ஆளினால் தொழில் நடாத்தப் படும் முறை.

7. (1) தனியார் பாதுகாப்பு முகவராண்மையொன்றின் தொழிலைக்கொண்டு நடாத்துவதற்குத் தனக்கு அதிகாரமளித்து இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை வைத்திருக்கும் ஆள், எல்லா நேரங்களிலும் அவரால் வழங்கப்படும் சேவைகளைத் தங்களுக்குப் பெற்றுக்கொள்ளும் ஆட்களையும் ஆதனத்தையும் பாதுகாக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் அவரது தொழிலை நடாத்துதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றை வைத்திருப்பவர் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பதிவேடுகளைப் பேணுதலும் அத்துடன் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அத்தகைய விவரத்திரட்டுகளை கொடுத்துதவுதலும் வேண்டும்.

தொழில் நிறுத்தம் பற்றி தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அறிவிப்பதற்கு இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பட்ட ஆளுக்குரிய கடமை.

8. (1) இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆளெவரும் தனியார் பாதுகாப்பு முகவராண்மையொன்றின் தொழிலைக் கொண்டு நடாத்துவதனை நிறுத்துமிடத்து, அவர் உடனடியாக அத்தகைய நிறுத்தம்பற்றி தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் நிறுத்தம்பற்றிய அறிவித்தல் கிடைக்கப்பெற்றதன்மீது 6 ஆம் பிரிவின்கீழ் அவரால் பேணப்படும் இடாப்பிலிருந்து அத்தகைய ஆளின் பெயரை நீக்குதல் வேண்டும் என்பதுடன் தனியார் பாதுகாப்பு முகவராண்மையொன்றின் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு அத்தகைய ஆளுக்கு அதிகாரமளித்து அவருக்கு வழங்கப்பட்ட உரிமத்தையும் இல்லாதொழித்தலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஆளெவரும், தனியார் பாதுகாப்பு முகவராண்மையின் தொழிலைக் கொண்டு நடாத்தவில்லையென நம்புவதற்கு தகுதிவாய்ந்த அதிகாரிக்குக் காரணமிருக்குமிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி அத்தகைய ஆளுக்கு அத்தகைய அறிவித்தலின் தேதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் அவர் தனியார் பாதுகாப்பு முகவராண்மை யொன்றின் தொழிலைக் கொண்டுநடாத்துவதை நிறுத்தியிருக்க வில்லை என்பதற்கான எண்பிப்பைக் கொடுத்துதவுமாறு அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தும் அறிவித்தலொன்றை பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம். இப்பிரிவின்கீழ் எந்த ஆளுக்கு அறிவித்தலொன்று அனுப்பப்பட்டுள்ளதோ அந்த ஆள் அறிவிப்பின் மூலம் தேவைப்படுத்தப்பட்ட எண்பிப்பை அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்கத் தவறுமிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி, 6 ஆம் பிரிவின் கீழ் அவரால் பேணப்படும் இடாப்பிலிருந்து அத்தகைய ஆளின் பெயரை நீக்குதல் வேண்டும் என்பதுடன் தனியார் பாதுகாப்பு முகவராண்மையின் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு அத்தகைய ஆளுக்கு அதிகாரமளித்து அவருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதொழித்தலும் வேண்டும்.

(4) தகுதிவாய்ந்த அதிகாரி, எந்த ஆளின் பெயர் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுகின்றதோ அந்த ஆளுக்கு (3)ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அத்தகைய நீக்கத்தையும் உரிமத்தின் இல்லாதொழிப்பையும் பற்றி எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

தகுதிவாய்ந்த அதிகாரிக்கு பதிவுசெய்யப் படுவதற்கான விண்ணப்பத்தி லுள்ள விவரங் களில் ஏதேனும் மாற்றம் பற்றி அறிவிக்கப்படல்.

**9.** இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றை வைத்திருப்பவர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவதற்கான அவரது விண்ணப்பத்தில் அடங்கியுள்ள விவரங்களில் ஏதேனும் மாற்றம் பற்றி அத்தகைய மாற்றத்தின் முப்பது நாட்களுக்குள் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

உரிமத்தைப் புதுப்பித்தல்.

**10.** இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அல்லது புதுப்பிக்கப் பட்ட உரிமமொன்று தகுதிவாய்ந்த அதிகாரியால், வலுவிலுள்ள உரிமம் முடிவுறுவதற்கு முன்னரான மூன்று பஞ் சாங்க மாதங்களைக் கொண்ட காலத்திற்குள் விதித்துரைக்கப் பட்ட படிவத்தில் அதன்பொருட்டு அவருக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது ஈராண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் புதுப்பிக்கப்படலாம்.

உரிமமொன்றை இல்லாதொழித்தல்.

**11.** தகுதிவாய்ந்த அதிகாரியானவர், இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட உரிமத்தை வைத்திருப்பவர் —

(i) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை அல்லது அத்தகைய உரிமம் எந்த நியதிக்கு அல்லது நிபந்தனைக்கு அமைவானதோ அந்த நியதியை அல்லது நிபந்தனையை மீறியுள்ளார் என ;

(ii) அவரால் வழங்கப்பட்ட சேவைகளைத் தங்களுக்குப் பயன்படுத்திக்கொண்ட ஆட்களின் அல்லது அவ்வாட்களின் ஆதனத்தின் பாதுகாப்பிற்குப் பாதகம் விளைவிக்கின்றவாறான அத்தகையவொரு முறையில் அவரது தொழிலை நடத்தியுள்ளார் என

அவர் திருப்தியுற்றால், தம்பக்க வழக்கை எடுத்துரைப்பதற் கான வாய்ப்பொன்றை அவருக்கு அளித்தபின்னர் அத்தகைய உரிமமொன்றை இல்லாதொழிக்கலாம் அல்லது புதுப்பிக்க மறுக்கலாம்.

பதிவுசெய்ய மறுத்தல், இல்லாதொழித்தல் என்பவற்றுக் கெதிரான மேன் முறையீடு.

**12.** (1) தகுதிவாய்ந்த அதிகாரி 4 ஆம் பிரிவின்கீழ் ஆளொருவரைப் பதிவுசெய்ய மறுப்பதனால் அல்லது இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட உரிமமொன்றை இல்லாதொழிப்பதனால் அல்லது புதுப்பிக்க மறுப்பதனால் இடருறும் ஆளெவரும் விடயத்திற்கேற்ப பதிவு செய்ய மறுக்கும் அல்லது உரிமமொன்றை இல்லாதொழிக்கும் அல்லது புதுப்பிக்க மறுக்கும் முடிவு கிடைக்கப்பெற்றதன் பின்னர் முப்பது நாட்களுக்குள் அத்தகைய முடிவுக்கெதிராக அமைச்சுச் செயலாளருக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம்.

(2) அமைச்சுச் செயலாளருக்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றின்மீது அமைச்சுச் செயலாளரின் முடிவால் இடருற்ற ஆளெவரும் அத்தகைய முடிவுக்கெதிராக, அமைச்சருக்கு எழுத்துமூலம் மேன்முறையீடு செய்யலாம். அமைச்சரின் முடிவு இறுதியானதாதல் வேண்டும். அத்தகைய மேன்முறையீடுகள் இரண்டும் ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்க்கப்படுதல் வேண்டும்.

பணிப்புகள்.

**13.** அமைச்சர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பயனுறுத்தும் நோக்கத்திற்குத் தகுதிவாய்ந்த அதிகாரிக்குக் காலத்துக்குக் காலம் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளை எழுத்தில் வழங்கலாம் என்பதுடன் தகுதிவாய்ந்த அதிகாரி அத்தகைய பணிப்புகளைப் பயனுறுத்துதலும் வேண்டும்.

உட்செல்லும் தத்துவம்.

**14.** தகுதிவாய்ந்த அதிகாரி அல்லது தகுதிவாய்ந்த அதிகாரியால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பெற்ற ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர் எந்த வளவுகளில் தனியார் பாதுகாப்பு முகவராண்மையொன்றின் தொழிலைக் கொண்டுநடாத்துகின்றாரோ அந்த வளவுகளில் அல்லது எந்த வளவுகள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றினால் எந்தச் சேவைகளை வழங்குவதற்கு அவர் அதிகாரமளிக்கப்படுகின்றாரோ அந்த எவையேனும் சேவைகளை வழங்குகின்றாரோ அந்த எவையேனும் வளவுகளில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அத்தகைய உரிமத்தின் நியதி நிபந்தனைகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என ஆய்ந்தறியும் நோக்கங்களுக்காக ஏதேனும் நேரத்தில் உட்செல்லலாம்.

உரிமமின்றி தனியார் பாதுகாப்பு முகவராண்மையொன்றின் தொழிலைக் கொண்டு நடாத்துதல் தவறொன்றாதல்.

**15.** இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பெறாமல் தனியார் பாதுகாப்பு முகவராண்மையின் தொழிலைக் கொண்டு நடாத்தும் ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஏழு ஆண்டுகளைக் கொண்டவொரு தவணைக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

நானாவித தவறுகள்.

**16.** (அ) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியை மீறுகின்ற ;

(ஆ) நாலாம் பிரிவின்கீழ் அவரால் செய்யப்பட்ட ஒரு விண்ணப்பத்தில் அல்லது வெளிப்படுத்துகையில் அல்லது அவரால் பேணப்படும் ஏதேனும் பதிவேட்டில் அல்லது 7ஆம் பிரிவின்கீழ் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விவரத்திரட்டில் ஏதேனும் கூற்று எவையேனும் முக்கிய விவரங்களில் பொய்யானதென அறிந்திருந்தும் அத்தகைய கூற்றைச் செய்கின்ற ;

(இ) தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அல்லது தகுதிவாய்ந்த அதிகாரியால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு 14ஆம் பிரிவால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களை அத்தகைய தகுதிவாய்ந்த அதிகாரி அல்லது ஆள் பிரயோகிக்கையில் அத்தகைய தகுதிவாய்ந்த அதிகாரியை அல்லது ஆளைத் தடுக்கின்ற அல்லது தடைசெய்கின்ற ; அல்லது

(ஈ) தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அல்லது தகுதிவாய்ந்த அதிகாரியால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு 14 ஆம் பிரிவால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அத்தகைய தகுதிவாய்ந்த அதிகாரியை அல்லது ஆளை செல்வாக்கிற்கு உட்படுத்துகின்ற அல்லது செல்வாக்கிற்கு உட்படுத்த முயற்சிக்கின்ற,

ஒவ்வோராளும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது ஐந்து ஆண்டுகளை விஞ்சாதவொரு தவணைக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

ஆட்களின் குழுக்களினால் புரியப்படும் தவறுகள்.

**17.** இச்சட்டத்தின்கீழ் தவறொன்று ஆட்களின் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து —

(அ) அக்குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருப்பின் கூட்டிணைக்கப்பட்ட குழுவினர் பணிப்பாளர் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாவார் எனக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அக்குழு ஒரு குழுமமாயின், அக்குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும் அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பணிப்பாளர் அல்லது பங்காளர், அத்தவறு அவரது அறிவுக்கு எட்டாமலேயே புரியப்பட்டதென அல்லது அத்தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தார் என எண்பிப்பாராயின் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

ஒழுங்கு விதிகள்.

**18.** (1) அமைச்சரானவர் விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்படுகின்றனவோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றனவோ அக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரானவர் (1) ஆம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றி பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும் அல்லது அவை தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) பதிவு செய்யப்பட்ட தனியார் பாதுகாப்பு முகவராண்மையால் ஆளணியினரைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைமுறை, அத்தகைய ஆளணியினர் தொடர்பில் பெறப்படவேண்டிய பாதுகாப்பு இசைவு உட்பட ;

(ஆ) அத்தகைய ஆளணியினருக்கு வழங்கப்படவேண்டிய ஆரம்பப் பயிற்சியும் சேவைக்காலப் பயிற்சியும் ;

(இ) அத்தகைய ஆளணியினரால் அணியப்படவேண்டிய சீருடைகள் ;

(ஈ) அத்தகைய ஆளணியினரால் உடைமையில் வைத்திருக்கப்படவேண்டிய சுடுபடைக்கலங்களின் பாவனையில் தகுதிமட்டம்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படவேண்டும் என்பதுடன் வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியாகக் கூடியவாறான அத்தகைய விரைவில் அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன்னிலைக்குக் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி எந்தத் தேதியிலிருந்து அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அந்தத் தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*ஐயப்பாடுகளைத் தவிர்ப்பதற்கு.*

**19.** ஐயப்பாடுகளைத் தவிர்ப்பதற்கு, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அரசு தொடர்பில் ஏற்புடையனவாகமாட்டா என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**20.** இச்சட்டத்தின் தமிழ் உரைக்கும் சிங்கள உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பொருள்கோடல்.*

**21.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி —

"தனியார் பாதுகாப்பு முகவராண்மையொன்றின் தொழில்" என்பது பகிரங்கத்துறையில் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆட்கள் உட்பட ஆட்களை அல்லது (அரசுக்குச் சொந்தமான ஆதனம் உட்பட) ஆதனத்தைப் பாதுகாப்பதற்கு கொடுப்பனவுக்காக சேவைகளை வழங்கும் தொழில் என்று பொருள்படும்.

"தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக தகுதிவாய்ந்த அதிகாரியாக இருப்பதற்கென 3ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆள் என்று பொருள்படும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.